**வேதாரண்யம் நகராட்சியின் 2025-ம் ஆண்டு ஜனவரி மாதம் 30ம் தேதி வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை திரு மா.மீ.புகழேந்தி,**

பொருள் எண்;.1

வேதாரண்யம் நகராட்சி பகுதியில் எதிர்வரும் 29.01.2025 அன்று **தை அமாவாசை திருவிழா** நடைபெற உள்ளதால் வேதாரண்யம் சன்னதி கடற்கரையில் புனித நீராட வரும் பக்தர்களுக்கு அடிப்படை வசதி பணிகளான குடிநீர் வசதி மற்றும் தற்காலிக உடை மாற்றும் அறைகள் அமைப்பது மிகவும் அவசியமாகும். எனவே இப்பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,50,000/-ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதி வழங்கலாம். மேற்படி செலவினங்களை பொது நிதியில் மேற்கொள்ளலாம்.

2. இப்பணியின் அவசரம், அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரிய நடவடிக்கையை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க. எண்.2526 /24/இ1)**

**தீர்மான எண்.1 : அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண்;.2

வேதாரண்யம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 4, 5 ஆறுகாட்டுத்துறை மற்றும் அகஸ்தியம்பள்ளி வார்டு 21 மணியன்தீவு மீனவ கிராமங்களில் வசிக்கும் கடல் மீனவர் குடும்பத்தை சேர்ந்த மீனவர் மற்றும் மீனவ மகளிர் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் சேமிப்பு மற்றும் நிவாரணத்திட்டத்தில் வறுமை கோட்டிற்கு கீழ் பயன்பெற 4வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் விண்ணப்பத்தின்படி, அப்பகுதியில் உள்ள தகுதி வாய்ந்த மீனவர்கள் மற்றும் மகளிர் சங்க உறுப்பினர்கள் சேமிப்பு மற்றும் நிவாரணத்திட்டத்தில் வறுமை கோட்டிற்கு கீழ் பயன்பெற பயனாளிகளை பரிந்துரை செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. வழிகாட்டி விதிமுறைகளை பின்பற்றி செயல்பட மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.178/2022/சி1

**தீர்மான எண்.2 : அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண்;.3

வேதாரண்யம் நகராட்சியில் SFC-2024-2025(Phase-III) நிதியின் கீழ் ரூ.22.50 இலட்சம் மதிப்பீட்டில் **மூன்றாம் தெரு, நகராட்சி நடுநிலை பள்ளியில்** பள்ளிகட்டிடங்கள் பராமரிப்பு செய்யும் பணி மேற்கொள்ள 13.12.2024 அன்று E-Tender மூலம் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப தகுதி உறை (Technical Bid)-ஐ கூர்ந்தாய்வு செய்ததில் இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஆவணங்கள் சரியாக உள்ள நிலையில் 20.12.2024 அன்று (Price Bid) விலை உறை திறக்கப்பட்டு அதன் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்டுள்ளது.

| | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டுத்தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூபாயில் | மதிப்பீட்டின்படி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | திரு. டி.செங்குட்டுவன் ஆயக்காரன்புலம். | 21,81,172.94 | 21,98,358.55 | 0.788 % அதிகம் |

**தீர்மான எண்.3 : அங்கீகரிக்கப்பட்டது**

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | M/s இராம்கரன் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கருப்பம்புலம். | | **21,79,907.00** | 0.058% குறைவு |

மேற்காணும் ஒப்புநோக்கு பட்டியலின்படி வரிசை எண்-2 ல் உள்ள ஒப்பந்ததாரர் M/s இராம்கரன் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கருப்பம்புலம் வேதாரண்யம் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டுத் தொகையிலிருந்து 0.058%குறைவாக வழங்கிய ஒப்பந்தப்புள்ளியை ஏற்ற நடவடிக்கையினை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- 1.மன்றம் பதிவுசெய்யலாம்.

2. இப்பணியின் அவசரம், அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கிய நடவடிக்கையை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க. எண். 2659/24/இ1)**

பொருள் எண்;.4

வேதாரண்யம் நகராட்சியில் SFC-2024-2025 (Phase-III) நிதியின் கீழ் ரூ.24.75 இலட்சம் மதிப்பீட்டில் தோப்புதுறை, நகராட்சி தொடக்க பள்ளியில் **(இந்து)** பள்ளிகட்டிடங்கள் பராமரிப்பு செய்யும் பணி மேற்கொள்ள 13.12.2024 அன்று E-Tender மூலம் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப தகுதி உறை (Technical Bid)-ஐ கூர்ந்தாய்வு செய்ததில் இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஆவணங்கள் சரியாக உள்ள நிலையில் 20.12.2024 அன்று (Price Bid) விலை உறை திறக்கப்பட்டு அதன் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்டுள்ளது.

| | **ஒப்பந்ததாரர் பெயர்** | **மதிப்பீட்டுத்தொகை ரூ.** | **ஒப்பந்தப்புள்ளி தொகை ரூபாயில்** | **மதிப்பீட்டின்படி விலை விகிதம்** |
|---|---|---|---|---|
| 1 | திரு. டி.செங்குட்டுவன் ஆயக்காரன்புலம். | 24,34,222.15 | 24,32,708.92 | 0.062 % குறைவு |
| 2 | திரு.டி.காளிமுத்து, கைலவனம்பேட்டை. | | 24,64,707.04 | 1.252 % அதிகம் |

மேற்காணும் ஒப்புநோக்கு பட்டியலின்படி வரிசை எண்-1 ல் உள்ள ஒப்பந்ததாரர் திரு. டி.செங்குட்டுவன் ஆயக்காரன்புலம்,வேதாரண்யம். என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டுத் தொகையிலிருந்து 0.062 %குறைவாக வழங்கிய ஒப்பந்தப்புள்ளியை ஏற்ற நடவடிக்கையினை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு:- | 1.மன்றம் பதிவுசெய்யலாம். |
| | 2. இப்பணியின் அவசரம், அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கிய நடவடிக்கையை மன்றம் அங்கீகரிக்கலாம். |

**(ந.க. எண். 2659/24/இ1)**

**தீர்மான எண்.4 : அங்கீகரிக்கப்பட்டது**

**பொருள் எண்;.5**

வேதாரண்யம் நகராட்சியில் SFC-2024-2025(Phase-III) நிதியின் கீழ் ரூ.**13.75** இலட்சம் மதிப்பீட்டில் தோப்புதுறை, நகராட்சி நடுநிலை பள்ளியில் **(முஸ்லீம்)** பள்ளிகட்டிடங்கள் பராமரிப்பு செய்யும் பணி மேற்கொள்ள **13.12.2024** அன்று E-Tender மூலம் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப தகுதி உறை (Technical Bid)-ஐ கூர்ந்தாய்வு செய்ததில் இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஆவணங்கள் சரியாக உள்ள நிலையில் **20.12.2024** அன்று (Price Bid) விலை உறை திறக்கப்பட்டு அதன் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்டுள்ளது.

| | **ஒப்பந்ததாரர் பெயர்** | **மதிப்பீட்டுத்தொகை ரூ.** | **ஒப்பந்தப்புள்ளி தொகை ரூபாயில்** | **மதிப்பீட்டின்படி விலை விகிதம்** |
|---|---|---|---|---|
| 1 | திரு. டி.செங்குட்டுவன் ஆயக்காரன்புலம். | 13,20,290.79 | 13,19,512.80 | 0.059 % குறைவு |
| 2 | திரு.டி.காளிமுத்து, கைலவனம்பேட்டை. | | 13,36,004.60 | 1.190 % அதிகம் |

மேற்காணும் ஒப்புநோக்கு பட்டியலின்படி வரிசை எண்-1 ல் உள்ள ஒப்பந்ததாரர் திரு. டி.செங்குட்டுவன் ஆயக்காரன்புலம்,வேதாரண்யம். என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டுத் தொகையிலிருந்து **0.059%**குறைவாக வழங்கிய ஒப்பந்தப்புள்ளியை ஏற்ற நடவடிக்கையினை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- **1.**மன்றம் பதிவுசெய்யலாம்.

**2.** இப்பணியின் அவசரம், அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கிய நடவடிக்கையை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க. எண். 2659/24/இ1)**

**தீர்மான எண்.5 : அங்கீகரிக்கப்பட்டது**

---

**பொருள் எண்;.6**

வேதாரண்யம் நகராட்சியில் SFC-2024-2025(Phase-III) நிதியின் கீழ் ரூ.**35.50** இலட்சம் மதிப்பீட்டில் தோப்புதுறை, நகராட்சி தொடக்க பள்ளியில் **(இந்து)** இரண்டு வகுப்பறையுடன் கூடிய புதிய வகுப்பறைகட்டிடம் கட்டும் பணி மேற்கொள்ள **13.12.2024** அன்று E-Tender மூலம் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப தகுதி உறை (Technical Bid)-ஐ கூர்ந்தாய்வு செய்ததில் இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஆவணங்கள் சரியாக உள்ள நிலையில் **20.12.2024** அன்று (Price Bid) விலை உறை திறக்கப்பட்டு அதன் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்டுள்ளது.

| | **ஒப்பந்ததாரர் பெயர்** | **மதிப்பீட்டுத்தொகை ரூ.** | **ஒப்பந்தப்புள்ளி தொகை ரூபாயில்** | **மதிப்பீட்டின்படி விலை விகிதம்** |
|---|---|---|---|---|
| 1 | திருமதி.வள்ளி, குட்டாச்சிகாடு. | 35,05,925.10 | 35,03,183.70 | 0.078 % குறைவு |
| 2 | திரு.டி.காளிமுத்து, கைலவனம்பேட்டை. | | 35,23,316.50 | 0.496 % அதிகம் |

**தீர்மான எண்.6 : அங்கீகரிக்கப்பட்டது**

| | | |
|---|---|---|
| | மேற்காணும் ஒப்புநோக்கு பட்டியலின்படி வரிசை எண்-1 ல் உள்ள ஒப்பந்ததாரர் திருமதி.வள்ளி, குட்டாச்சிகாடு ,வேதாரண்யம். என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டுத் தொகையிலிருந்து 0.078% குறைவாக வழங்கிய ஒப்பந்தப்புள்ளியை ஏற்ற நடவடிக்கையினை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:- 1.மன்றம் பதிவுசெய்யலாம்.<br>2. இப்பணியின் அவசரம், அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கிய நடவடிக்கையை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>**(ந.க. எண். 2659/24/இ1)** | |
| பொருள் எண்;.7 | வேதாரண்யம் நகராட்சியில் SFC-2024-2025(Phase-III) நிதியின் கீழ் ரூ.35.50 இலட்சம் மதிப்பீட்டில் தோப்புதுறை, நகராட்சி நடுநிலை பள்ளியில் **(முஸ்லீம்)** இரண்டு வகுப்பறையுடன் கூடிய புதிய வகுப்பறைகட்டிடம் கட்டும் பணி மேற்கொள்ள 13.12.2024 அன்று E-Tender மூலம் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப தகுதி உறை (Technical Bid)-ஐ கூர்ந்தாய்வு செய்ததில் இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஆவணங்கள் சரியாக உள்ள நிலையில் 20.12.2024 அன்று (Price Bid) விலை உறை திறக்கப்பட்டு அதன் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்டுள்ளது. | **தீர்மான எண்.7 : அங்கீகரிக்கப்பட்டது** |

| | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டுத்தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூபாயில் | மதிப்பீட்டின்படி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | திருமதி.வள்ளி, குட்டாச்சிகாடு. | 35,05,925.10 | 35,28,205.70 | 0.636 % அதிகம் |
| 2 | திரு.டி.காளிமுத்து, கைலவனம்பேட்டை. | | 35,04,534.10 | 0.040 % குறைவு |

மேற்காணும் ஒப்புநோக்கு பட்டியலின்படி வரிசை எண்-2 ல் உள்ள ஒப்பந்ததாரர் திரு. திரு.டி.காளிமுத்து,கைலவனம்பேட்டை ,வேதாரண்யம். என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டுத் தொகையிலிருந்து 0.040% குறைவாக வழங்கிய ஒப்பந்தப்புள்ளியை ஏற்ற நடவடிக்கையினை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- 1. மன்றம் பதிவுசெய்யலாம்.

2. இப்பணியின் அவசரம், அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கிய நடவடிக்கையை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க. எண். 2659/24/இ1)**

| பொருள் எண்;.8 | வேதாரண்யம் நகராட்சிக்கு சொந்தமான கீழ்காணும் மூன்றாண்டு குத்தகை இனங்களின் 2022-23, 2023-24, 2024-25 ஆகிய மூன்றாண்டுகள் உரிமக்காலம் 31.03.2025 மற்றும் 31.05.2025உடன் முடிவடைய உள்ளது. மேற்படி குத்தகை இனங்களுக்கு 2025-26, 2026-27, 2027-28 ஆண்டிற்கு பொது ஏலம் கோரி' உரிமம் ஒப்படைப்பு செய்யவும். ஏல வைப்புத்தொகை மற்றும் கூடுதல் வைப்புத் தொகை மற்றும் ஏல கட்டணங்களை மாற்றி அமைக்க வேண்டியுள்ளது. அதன் விவரம் | **தீர்மான எண்.8 : அனுமதிக்கப்பட்டது** |
|---|---|---|

| வ.எண். | குத்தகை இனத்தின் விவரம் | ஏல வைப்புத் தொகை ரூ | கூடுதல் வைப்புத் தொகை ரூ. | மொத்த தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1. | தோப்புத்துறை செக்போஸ்ட் கட்டண வசூல் உரிமம் | 5000 | 5000 | 10000 |
| 2. | பேருந்து நிலைய கட்டண கழிவறை கட்டண வசூல் உரிமம் | 25000 | 25000 | 50000 |
| 3. | இராஜாஜி பூங்கா கட்டண கழிவறை கட்டண வசூல் உரிமம் | 25000 | 25000 | 50000 |
| 4. | பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 25000 | 25000 | 50000 |
| 5. | ஆடு அடிக்கும் தொட்டி கட்டண வசூல் உரிமம் | 5000 | 5000 | 10000 |
| 6. | தினசரி சந்தை கட்டண வசூல் உரிமம் | 50000 | 50000 | 100000 |
| 7. | சேது ரஸ்தா செக்போஸ்ட் கட்டண வசூல் உரிமம் | 50000 | 50000 | 100000 |
| 8. | வெட்டுக்குளம் மேல்பாகம் வேன் நிறுத்தக் கட்டண உரிமம் | 10000 | 10000 | 20000 |
| 9. | நாகை சாலை கார் நிறுத்தக் கட்டண உரிமம் | 10000 | 10000 | 20000 |

**திருத்தியமைக்கப்பட்ட  கட்டணம் விவரங்கள்**

| வ.எண். | குத்தகை இனத்தின் விவரம் | விவரம் | ஏற்கனவே வசூல் செய்யப்படும் கட்டணம் | உயர்வு செய்யப்படும் கட்டணம் |
|---|---|---|---|---|
| 1 | பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டண வசூல் உரிமம் | பேருந்து ஒன்றுக்கு | ரூ.8.00 | ரூ.8.00 |
| 2 | பேருந்து நிலைய கட்டண கழிவறை கட்டண வசூல் உரிமம் | அ) சிறுநீர் கழிக்க<br>ஆ)மலஜலம் கழிக்க<br>இ) குளியல் அறை | ரூ.1.00<br>ரூ.2.00<br>ரூ.5.00 | ரூ.2.00<br>ரூ.5.00<br>ரூ.10.00 |
| 3 | இராஜாஜி பூங்கா கட்டண கழிவறை | அ) சிறுநீர் கழிக்க | ரூ.1.00 | ரூ.2.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| | கட்டண வசூல் உரிமம் | ஆ)மலஜலம் கழிக்க<br>இ) குளியல் அறை | ரூ.2.00<br>ரூ.5.00 | ரூ.5.00<br>ரூ.10.00 |
| 4 | ஆடு அடிக்கும் தொட்டி கட்டண வசூல் உரிமம் | ஆடு ஒன்றுக்கு | ரூ.10.00 | ரூ.15.00 |
| 5 | தினசரி சந்தை கட்டண வசூல் உரிமம் | அ. கடை ஒன்றுக்கு/நாள் ஒன்றுக்கு<br>ஆ. தலைசுமை ஒன்றுக்கு<br>இ. சைக்கிள் தள்ளுவண்டி<br>ஈ. தற்காலிக கடை ஒன்றுக்கு<br>உ.மாட்டு வண்டி ஒன்றுக்கு<br>ஊ.மோட்டார் அல்லது வேன்<br>எ.லாரி ஒன்றுக்கு/நாள் ஒன்றுக்கு | ரூ.5.00<br>ரூ.5.00<br>ரூ.5.00<br>ரூ.10.00<br>ரூ.8.00<br>ரூ.15.00<br>ரூ.20.00 | ரூ.10.00<br>ரூ.10.00<br>ரூ.10.00<br>ரூ.20.00<br>ரூ.15.00<br>ரூ.20.00<br>ரூ.30.00 |
| 6 | தோப்புத்துறை செக்போஸ்ட் கட்டண வசூல் உரிமம் | அ. லாரி கட்டணம்<br>ஆ. மீன் வகை லாரி /வேன்<br>இ. கருவாடு வேன் | ரூ.25.00<br>ரூ.20.00<br>ரூ.15.00 | ரூ.30.00<br>ரூ.25.00<br>ரூ.20.00 |
| 7 | சேது ரஸ்தா செக்போஸ்ட் கட்டண வசூல் உரிமம் | அ.உப்பு லாரி கட்டணம்<br>ஆ. மீன் வகை லாரி /வேன்<br>இ, கருவாடு வேன் | ரூ.25.00<br>ரூ.20.00<br>ரூ.15.00 | ரூ.30.00<br>ரூ.25.00<br>ரூ.20.00 |
| 8 | வெட்டுக்குளம் மேல்பாகம் வேன் நிறுத்தக் கட்டணம் உரிமம் | வேன் ஒன்றுக்கு /நாள் ஒன்றுக்கு | ரூ.15.00 | ரூ.15.00 |
| 9 | நாகை சாலை கார் நிறுத்தக் கட்டணம் உரிமம் | கார் ஒன்றுக்கு /நாள் ஒன்றுக்கு | ரூ.10.00 | ரூ.10.00 |

மேற்கண்ட விவரப்படியான மூன்றாண்டு குத்தகை இனங்களுக்கு ஏல வைப்புத் தொகை மற்றும் கட்டண விகிதங்கள் மாற்றி அமைக்கப்பட்டதற்கும் நகராட்சி நிபந்தனைகளுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்படி பொது ஏல நடவடிக்கைகள், விளம்பர கட்டணம், கட்டண ரசீதுகள் பிரிண்டிங் மற்றும் இதர செலவினங்களுக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.100000/—த்தை பொது நிதியில் மேற்கொள்ளலாம்.

ந.க.எண். 201/2025/அ2

| | | |
|---|---|---|
| பொருள் எண்;.9 | வேதாரண்யம் நகராட்சியில் ரூ.19.60 லட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.1 முதல் 21 முடிய உள்ள அனைத்து வார்டுகளிலும் டெங்கு நோய் தடுப்பு பணி மேற்கொள்ள மன்றம் தனது சாதாரண கூட்ட தீர்மானம் எண்.170 நாள்.21.01.2024ல் அனுமதி அளித்துள்ளதை தொடர்ந்து, 26.12.2024 அன்று E-Tender மூலம் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப தகுதி உறை (Technical Bid)-ஐ கூர்ந்தாய்வு செய்ததில் இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஆவணங்கள் சரியாக உள்ள நிலையில் 30.12.2024 அன்று (Price Bid) விலை உறை திறக்கப்பட்டு அதன் ஒப்புநோக்கு பட்டியல் கீழக்கண்டவாறு தயார் செய்யப்பட்டுள்ளது. | **தீர்மான எண்.9 :**<br>**அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><th>வ.எ.</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீட்டுத்தொகை ரூ. லட்சத்தில்</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூபாயில் (நபர் ஒன்றுக்கு)</th></tr>
<tr><td>1</td><td>சன் காண்ட்ராக்டர், வேதாரண்யம்</td><td rowspan="2">19.60</td><td>ரூ.655/-</td></tr>
<tr><td>2</td><td>உதயம் காண்ட்ராக்டர், வேதாரண்யம்</td><td>ரூ.675/-</td></tr>
</table>
மேற்காணும் இரண்டு நிறுவனங்களின் ஒப்பந்த விகிதத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட ஒப்புநோக்கு பட்டியிலின்படி வரிசை எண்.1-ல் உள்ள ஒப்பந்ததாரர் ‘‘சன் காண்ட்ராக்டர், வேதாரண்யம்’’ என்ற நிறுவனத்தின் ஒப்பந்த விகிதம் குறைவாக உள்ளதால் அந்நிறுவனத்திற்கு 1% security Deposit தொகை செலுத்திடக்கோரி LOA அனுப்பியதில், 04.01.2025 அன்று 1% security Deposit தொகை செலுத்தியுள்ளது. எனவே ‘‘சன் காண்ட்ராக்டர், வேதாரண்யம்’’ என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. இப்பணியின் அவசர, அவசியத்தினை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கிய அலுவலக நடவடிக்கையினை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>
(ந.க.எண். 2618/2024எச்.1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்;.10</td>
<td>வேதாரண்யம் நகராட்சியில் ரூ.19.60 லட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.1 முதல் 21 முடிய உள்ள அனைத்து வார்டுகளிலும் டெங்கு நோய் தடுப்பு பணி மேற்கொள்ள 26.12.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரும் விளம்பர அறிவிப்பு TRINITY MIRROR நாளிதழில் 18.12.2024 அன்று மதுரை பதிப்பில் மிகச்சிறிய அளவில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு விளம்பரக்கட்டணமாக ரூ.13,860/-ஐ வழங்கிடக்கோரி ‘‘Advertisement Manager, TRINITY PRINTERS AND PUBLISHERS PRIVATE LIMITED, CHENNAI’’ நிறுவனத்திடமிருந்து பில்பட்டியல் (Bill No.MDUTAB242500614/Dated:18.12.2024) வரப்பெற்றுள்ளது. அதன்படி தொகை ரூ.13,860/-ஐ நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
(ந.க.எண்.2618/2024/ எச்.1)</td>
<td>தீர்மான எண்.10:<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்;.11</td>
<td>வேதாரண்யம் நகராட்சியில் ரூ.19.60 லட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.1 முதல் 21 முடிய உள்ள அனைத்து வார்டுகளிலும் டெங்கு நோய் தடுப்பு பணி மேற்கொள்ள 26.12.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரும் விளம்பர அறிவிப்பு தினகரன் நாளிதழில் 18.12.2024 அன்று தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் பதிப்பில் மிகச்சிறிய அளவில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு விளம்பரக்கட்டணமாக ரூ.10,080/-ஐ வழங்கிடக்கோரி ‘‘KAL PUBLICATIONS (P) LTD, TRICHY’’ நிறுவனத்திடமிருந்து பில்பட்டியல் (Bill No.3300524502/Dt.18.12.2024) வரப்பெற்றுள்ளது. அதன்படி தொகை ரூ.10,080/-ஐ நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
(ந.க.எண். 2618/2024/எச்.1)</td>
<td>தீர்மான எண்.11:<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்.12</td>
<td>வேதாரண்யம் நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மைத்திட்டத்தின்கீழ், மறுசுழற்சிக்கு பயன்படாத பிளாஸ்டிக் கழிவுகள் அதிக அளவில் சேகரமாகி உள்ளதால் அவற்றினை அகற்றி அரியலூர் செட்டிநாடு சிமெண்ட் தொழிற்சாலைக்கு கொண்டு செல்ல வாடகை வாகனம் அமர்த்திக்கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.1.00 லட்சத்தினை நகராட்சி பொதுநிதியின்கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
(ந.க.எண்.1092/2012 எச்.1)</td>
<td>தீர்மான எண்.12:<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| பொருள் எண்.13 | திரு. பல்ராம் சிங் என்பவரால் மாண்புமிகு உச்சநீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண்.W.P.(Civil) 324/2020)-ல் 20.10.2023 மற்றும் 11.12.2024 ஆகிய தேதிகளில் வழங்கப்பட்ட ஆணைகளின்படி மனிதக்கழிவுகளை மனிதர்களே கைகளால் அகற்றும் பணியினை மேற்கொள்ளும் நபர்களை (Manual Scavengers) கணக்கெடுப்பு செய்யப்பட்டதில் எவரும் கண்டறியப்படவில்லை என தெரிய வருகிறது. இதில் ஏதேனும் ஆட்சேபணையிருப்பின், மனித கழிவுகளை மனிதர்களே அகற்றும் தொழில்புரிவோர் தடுப்பு மற்றும் அவர்களது மறுவாழ்வு சட்டம் 2013 பிரிவு எண்-11ன்படி ஆட்சேபணை இருப்பின் தெரிவித்திடக்கோரும் விளம்பரம் தினகரன் நாளிதழில் 25.12.2024 அன்று தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் பதிப்பில் மிகச்சிறிய அளவில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு விளம்பரக்கட்டணமாக ரூ.8,400/-ஐ வழங்கிடக்கோரி "KAL PUBLICATIONS (P) LTD, TRICHY" நிறுவனத்திடமிருந்து பில்பட்டியல் (Bill No.3300525923/Dt.25.12.2024) வரப்பெற்றுள்ளது. அதன்படி தொகை ரூ.8,400/-ஐ நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.1998/2024 எச்.1) | **தீர்மான எண்.13: அனுமதிக்கப்பட்டது** |
| பொருள் எண்.14 | வேதாரண்யம் நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் கழிவுநீர் அகற்றும்பணி மேற்கொள்ளும் நகராட்சி கழிவுநீர் வாகனத்திற்கு 20.09.2024 அன்று 30 மீட்டர் ஒஸ் மற்றும் அது தொடர்புடைய பொருட்கள் வாங்கி பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது மேலும் 15 மீட்டர் ஒஸ் மற்றும் அது தொடர்புடைய பொருட்கள் வாங்கிட வேண்டியது அவசியமாகிறது. இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.60,000/- ஆகும். எனவே இச்செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.175/2025 எச்.1) | **தீர்மான எண்.14: அனுமதிக்கப்பட்டது** |
| பொருள் எண்.15 | வேதாரண்யம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் கழிவுநீர் வாகனம் மூலம் நகராட்சி பகுதியில் உள்ள குடியிருப்புகள் மற்றும் வணிக நிறுவனங்களில் இருந்து கழிவுநீர் அகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதில் சுமார் 6000 லிட்டர் அளவில் உள்ள டேங்கர் மூலம் கழிவுநீர் அகற்றிட நடை ஒன்றுக்கு ரூ.1100/- கட்டணம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. தற்போது நகராட்சிக்கு சொந்தமான இரண்டு கழிவுநீர் வாகனங்கள் இயக்கப்பட்டு வருகிறது. அவற்றின் எரிபொருள் மற்றும் பராமரிப்பு பணிக்கு பயன்படும் வகையில், தற்சமயம் வசூல் செய்யப்பட்டு வரும் கழிவுநீர் கட்டணம் ரூ.1100/-ல் இருந்து 1800/- ஆக உயர்த்தி வசூல் செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.164/2025/எச்.1) | **தீர்மான எண்.15: அனுமதிக்கப்பட்டது** |
| பொருள் எண்.16 | வேதாரண்யம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் கழிவுநீர் வாகனம் எண்.TN-51J-1570 ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டதற்கு நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட செலவினம், Tax Receipt மற்றும் E-Fee receipt ஆகியவற்றிக்கான மொத்த தொகை ரூ.6,518/- இந்நகராட்சி ஓட்டுநர் திரு.ச. சுப்பையா என்பவர் மூலம் மேற்கொள்ளப்பட்டதால் அத்தொகையினை மேற்கண்ட ஓட்டுநருக்கு வழங்கிடவும், இச்செலவினத்தினை நகராட்சி பொதுநிதியின்கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.2154/2024 எச்.1) | **தீர்மான எண்.16: அனுமதிக்கப்பட்டது** |

**பொருள் எண்.17**

வேதாரண்யம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் கழிவுநீர் வாகனம் எண்.TN-51H-7443 ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அப்பணியின்போது நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மேற்கொள்ளப்படும் செலவினம், Tax Receipt மற்றும் E-Fee receipt ஆகியவற்றிக்கான மொத்த தொகை உத்தேசமாக சுமார் ரூ.10,000/- ஆகும். எனவே இச்செலவினத்தினை நகராட்சி பொதுநிதியின்கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.2224/2024 எச்.1)

**தீர்மான எண்.17: அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.18**

வேதாரண்யம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் டிராக்டர் வாகனம் எண்.TN-51AT-9951-க்கான Filter Element, Tafe Miles – Classic 8.5 L – 08/24 மற்றும் Waste Cloth ஆகியவை முறையே 1 எண்ணிக்கை வீதம் வாங்கிய வகையில் தொகை ரூ.4,095/-ஐ பணி மேற்கொண்ட நிறுவனமான GEO Tractors, Thiruvarur நிறுவனத்திற்கு வழங்கிடவும், இச்செலவினத்தினை நகராட்சி பொதுநிதியின்கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.2825/2024 எச்.1)

**தீர்மான எண்.18: அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.19**

வேதாரண்யம் நகராட்சியில் பொது நிதி –2024–2025 ன் கீழ் , கீழ்கண்ட பணிகளுக்கு 24.01.2025 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதில், தயார் செய்யப்பட்ட ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் , ஒப்புதலுக்கும் .

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ . லட்சத்தில்) | ஒப்பந்தாரர் பெயர் | விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | வேதாரண்யம் நகராட்சிக்குட்பட்ட கடற்கரை சாலையில் நகராட்சி பராமரிப்பில் உள்ள தெருவிளக்குகள் பராமரிக்கவும், நகராட்சி கட்டிடங்களில் ஏற்படும் மின்பழுதுகளை சரிசெய்யவும், நகராட்சிக்கு சொந்தமான எட்டு பள்ளிகளில் உள்ள கட்டிடங்களில் ஏற்படும் மின் பழுதுகளை சரிசெய்யும் பணி. | 4.50 | திரு.டி.செங்குட்டுவன், ஒப்பந்ததாரர், வேதாரண்யம். | 0.38 % குறைவு |
| | | | திரு. த.காளிமுத்து ஒப்பந்ததாரர், வேதாரண்யம் | 1.15% அதிகம் |
| 2. | தை அமாவாசை திருவிழாவை முன்னிட்டு வேதாரண்யம் சன்னதி கடற்கரையில் புனித நீராடவரும் பக்தர்களுக்கு அடிப்படைவசதிகள் மேற்கொள்ளும் பணி. | 1.50 | திரு.டி.செங்குட்டுவன், ஒப்பந்ததாரர், வேதாரண்யம். | 0.80 % குறைவு |
| | | | திரு. த.காளிமுத்து ஒப்பந்ததாரர், வேதாரண்யம். | 1.35% அதிகம் |

**தீர்மான எண்.19: அனுமதிக்கப்பட்டது**

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>3.</td><td>வேதாரண்யம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 1 முதல் 21 வார்டுகளில் உள்ள அடிப்பம்புகள் பழுது சீர்செய்ய அடிப்பம்பு உதிரி பாகங்கள் கொள்முதல் செய்யும் பணி</td><td>3.00</td><td>M/s பாலாஜி ஹார்டுவேர்ஸ் , பரவை</td><td>0.70% குறைவு</td></tr>
<tr><td></td><td></td><td></td><td>திரு. த.காளிமுத்து ஒப்பந்ததாரர், வேதாரண்யம்</td><td>1.40% அதிகம்</td></tr>
</table>
அலுவலக குறிப்பு :<br>
1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவாக ஒப்பந்த விகிதம் வழங்கியுள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் ஏற்கலாம்<br>
2) இப்பணியின் அவசரம் , அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கிய நடவடிக்கையை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>
ந.க.எண்.2597/2024/இ1
</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்.20</td>
<td>
வேதாரண்யம் நகரம், தோப்புத்துறை கிராமம் புல எண்: 539/01–ல் 19300 சதுர மீட்டர் பரப்பளவில், குடியிருப்பு மனைப்பிரிவு அனுமதி கோரி திரு.H.ஜலாலுதீன் என்பவர் நகர் ஊரமைப்புதுறைக்கு விண்ணப்பித்திருந்தார். மேற்கண்ட விண்ணப்பித்தினை கூராய்வு செய்து உதவி இயக்குநர், நகர் ஊரமைப்புதுறை, நாகப்பட்டினம் அவர்களால் தொழில்நுட்ப ஒப்புதல் எண்: 9CBQCPNG/2024(22537)/2024/Tep நாள்: 17.05.2024–ன் படி, குடியிருப்பு மனைகளாக பிரித்து அமைக்கப்பட்ட மனைப்பிரிவுக்கு ம.வ/ மா.ந.ஊ.அ(நா.ம) எண் SWP 2/2024– ன் படி திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br>
மேற்கண்ட சாலை அமைப்பு வரைபடத்தில் அமைதிக்கப்பட்டதன்படி மனைப்பிரிவில் நகராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட சாலைகள் மற்றும் மூலை முடக்குகளின் பரப்பளவு 4531.50 சதுர மீட்டர், பூங்கா மற்றும் பொது உபயோகம் 1560.88 சதுர மீட்டர் பரப்பளவு உள்ள இடங்களில் தானபத்திரம் ஆவண எண்: 1121/2024 நாள்: 06.05.2024–ன் படி ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.<br>
மேலும் சாலை அமைப்பு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் மனைப்பிரிவு உரிமையாளரால் அமைக்கப்பட்டுள்ளது. நகராட்சி பொறியாளர் குறிப்பின் படி மழைநீர் வடிகால் அமைத்திட ரூ.24,50,000/– குடிநீர் பகிர்மான குழாய்அமைத்திட ரூ.2,00,000/– மனை பிரிவு பராமரிப்பு வைப்புத்தொகை ரூ.5,00,000/– ஆக கூடுதல் ரூ. 31,50,000/– (முப்பத்து ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) வங்கி வரைவோலை (Demand Draft) எண் 600003000190000. Dt. 27.01.2025, மனைப்பிரிவு உரிமையாளரால் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் மனைப்பிரிவில் மின்கம்பங்கள் அமைக்க மனைப்பிரிவு உரிமையாளரால் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ரூ.1,92,630/– இரசிது எண்: TRG5101A2D345 நாள்: 08.10.2024–ன்படி செலுத்தப்பட்டுள்ளது.<br>
மேற்கண்ட மனைபிரிவு சாலை அமைப்பு வரைபடத்தில் உள்ளவாறு தார் சாலை மற்றும் சிறுபாலங்கள் முதலிய அடிப்படைவசதிகள் மேற்கொள்ளப்பட்டுவிட்டதால் நகராட்சி பராமரிப்பில் எடுத்துக்கொள்ளலாம் என பொறியியல் பிரிவில் குறிப்பு வழங்கப்பட்டுள்ளது.<br>
மேலும் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின்படி நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்ய வேண்டிய பொது ஒதுக்கீடுகளை பத்திர பதிவு எண்: 1121/2024 நாள்: 06.05.2024–ன் படி ஒப்படைப்பு செய்துள்ளதால், நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாகப்பட்டினம் அவர்கள் விதித்துள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு இறுதி அனுமதி வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்<br>
ந.க.எண்: 1409/2024/எப்1
</td>
<td>தீர்மான எண்.20: அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| பொருள் எண்.21 | வேதாரண்யம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்,1 முதல் 21 வரை உள்ள பகுதிகளில் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் 35 எண்ணிக்கையில் அமைந்துள்ளது. அதில் 33 சிறுமின் விசை பம்பகளும், மேல்நிலை நீர்தேக்க தொட்டியும் மற்றும் கொள்ளிடம் கூட்டு குடிநீர் நீர்தேக்க தொட்டியும் அமைந்துள்ளது. மேற்படி உள்ளூர் நீர் ஆதாரமான நீர்தேக்க தொட்டிகளை இயக்குவதற்கு போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால் நீர்தேக்க தொட்டிகளின் அருகில் உள்ள பொதுமக்கள் மூலம் இயக்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ஒரு மின்விசை பம்பிற்கு ஒரு நபருக்கு மாதம் ரூ 250/- வீதமும், மேல்நிலை நீர்தேக்க தொட்டி இயக்குவதற்கு மாதம் ரூ.1000/- வீதமும் ஜனவரி - 2025 முதல் ஜுன் - 2025 வரை ஆகும் உத்தேச செலவினம் ரூ.60000/க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு 1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. மேற்படி செலவினத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண். 2235 /2021/இ2 | **தீர்மான எண்.21: அனுமதிக்கப்பட்டது** |
| பொருள் எண்.22 | வேதாரண்யம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்,1 முதல் 21 வார்டு பகுதியில் உள்ள கொள்ளிடம் மற்றும் உள்ளூர் குடிநீர் ஆதார பகிர்மான குழாயில் ஏற்படும் பழுதுகள் மற்றும் உடைப்புகள் உடனுக்குடன் சரி செய்யவும் (உதிரிபாகங்கள் உட்பட ) அதற்கான உதிரிபாகங்கள் மற்றும் முற்றிலும் சேதமடைந்த கை பம்புகளை வேறு இடத்தில் மாற்றி அமைக்கவும் ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ . 4.00 **இலட்சத்திற்கு** மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு 1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2.மேற்படி செலவினத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 2235 /2021/இ1 | **தீர்மான எண்.22: அனுமதிக்கப்பட்டது** |
| பொருள் எண்.23 | வேதாரண்யம் நகராட்சி எல்லைக்குட்பட்ட நாகப்பட்டினம் சாலை புல எண்.632/10 ல் மகாராஜபுரத்தில் KNMT 2023-2024 திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் அறிவுசார் மையத்தின் பணிகள் 60 சதவீதம் முடிக்கப்பட்ட நிலையில் நகர்மன்றத் தலைவர் ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களின் கள ஆய்வு அறிவுரையின்படி அறிவுசார் மையத்தை சுற்றி தாழ்வான பகுதியாக உள்ளதால் அதனை சுற்றி மண் நிரப்ப வேண்டி உள்ளதால் மேற்படி பணிக்கு ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ . 12. .00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு 1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. மேற்படி செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 2239 /2023இ1 | **தீர்மான எண்.23: அனுமதிக்கப்பட்டது** |
| பொருள் எண்.24 | வேதாரண்யம் நகராட்சி பகுதியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் வேதாரண்யம் - கொள்ளிடம் கூட்டு குடிநீர் திட்டம்-2000 மூலம் கொள்ளிடம் ஆற்றின் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து குடிநீர் பெறப்பட்டு வண்டுவாஞ்சேரி நீருந்து நிலையம் மூலம் 26 கி.மீ தொலைவிலிருந்து வேதாரண்யம் நகராட்சி பகுதிக்கு 450எம்எம் PSC பிரதான குழாய் மூலம் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் மூலம் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.<br>இந்நிலையில் மேற்படி பிரதான குழாய்களில் அடிக்கடி ஏற்படும் உடைப்புகளாலும், குடிநீர் கசிவுகளாலும் நகராட்சி பகுதிக்கு குடிநீர் வழங்கும் பணி பாதிப்படைவதுடன் போதிய அளவு குடிநீர் கிடைக்கப்பெறாமல் பொது மக்களுக்கு சிரமம் ஏற்படுகிறது.<br>தற்போது 980 MVS (Multi Village Scheme) திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் வண்டுவாஞ்சேரி நீருந்து நிலையத்திலிருந்து வேதாரண்யம் | **தீர்மான எண்.24: அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| | நகராட்சிக்கு குடிநீர் கொண்டு செல்லும் 450எம்எம் PSC பிரதான குழாய் புதிதாக மாற்றுவதற்கு மேற்படி திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்படாமல் விடுபட்டுள்ளது. இந்நேர்வில் ஏற்கனவே உள்ள வண்டுவாஞ்சேரி நீருந்து நிலையம் மூலம் 26 கி.மீ தொலைவிலிருந்து வேதாரண்யம் நகராட்சி பகுதிக்கு 450எம்எம் PSC பிரதான குழாய்கள் சுமார் 2004ம் ஆண்டு வேதாரண்யம் – கொள்ளிடம் கூட்டு குடிநீர் திட்டத்தில் பதிக்கப்பட்டு 20 ஆண்டுகள் மேலாகியுள்ளதால் பிரதான குழாய்களில் அடிக்கடி ஏற்படும் உடைப்புகள் ஏற்படுவதுடன் சீரான குடிநீர் விநியோகம் தடைபடுகிறது. எனவே, தற்போது பணி நடைபெற்று வரும் 980 MVS (Multi Village Scheme) திட்டத்தில் வண்டுவாஞ்சேரி நீருந்து நிலையத்திலிருந்து வேதாரண்யம் நகராட்சிக்கு குடிநீர் கொண்டு செல்லும் 450எம்எம் PSC பிரதான குழாய் புதிதாக மாற்றி வேதாரண்யம் நகராட்சிக்கு நிர்ணயித்துள்ள உச்சபட்ச அளவான 3.64 எம்.எல்.டி குடிநீர் வழங்கிட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் 980 MVS திட்டத்தின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளகோரி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு மாவட்ட ஆட்சிதலைவர், நாகப்பட்டினம் அவர்கள் வழி கருத்துரு அனுப்பிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண். 394/2025/இ1 | |

ஒம்/–
மா.மீ.புகழேந்தி
நகர்மன்றத் தலைவர்